செய்தி வெளியீடு எண்.165 நாள். 19 .02.2010

# <u>செய்தி வெளியீடு</u>

## <u>தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில்<br>40 இலட்சம் ரூபாய்ச் செலவில்<br>தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம் !</u>

## <u>முதலமைச்சர் கலைஞர் ஆணை !</u>

நமது நாட்டின் விடுதலையை உயிர்மூச்சாகக் கொண்டு, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் சீடராகவும், தேசபந்து சித்தரஞ்சன்தாஸ், கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி., மகாகவி பாரதியார் ஆகியோரின் நெருங்கிய நண்பராகவும் திகழ்ந்தவர் தியாகி சுப்பிரமணிய சிவா. அவர் சுதந்திரப் போராட்டத்தில் தீவிர ஈடுபாடு கொண்டதன் காரணமாக, வெள்ளையர் ஆட்சி அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. அச்சிறையின் தூய்மையற்ற சூழ்நிலையால், அவர் கொடிய நோய்க்கு ஆளானபோதும், சுதந்திர வேட்கையைத் தமது இறுதி நாள் வரை கைவிடாமல், வாழ்ந்து மறைந்தார். அந்தத் தியாகசீலர் சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு, அவர் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பாப்பாரப்பட்டியில் 40 இலட்ச ரூபாய்ச் செலவில் மணிமண்டபம் அமைத்திட முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.